# சென்னை மெட்ரோ இரயில் திட்டம் – கட்டம்–Iஇன் நீட்டிப்புத்திட்டத்தின் சிறப்பம்சங்கள்

இரண்டு வழித்தடங்கள் மற்றும் 32 மெட்ரோ இரயில் நிலையங்களுடன் மொத்தம் 45 கி.மீ நீளத்திலான சென்னை மெட்ரோ இரயில் திட்டம்–கட்டம்–I தற்போது இயக்கப்பட்டு வருகின்றது. வண்ணாரப்பேட்டை முதல் விமான நிலையம் வரையிலான வழித்தடம் –1 நீல வழித்தடமாகவும் மற்றும் புரட்சித்தலைவர் டாக்டர் எம்.ஜி.இராமச்சந்திரன் சென்ட்ரல் மெட்ரோ முதல் பரங்கிமலை வரையிலான வழித்தடம்–2 பச்சை வழித்தடமாகவும் அழைக்கப்படுகிறது. வண்ணாரப்பேட்டை முதல் விம்கோநகர் வரை 9.051 கி.மீ தூரத்திலான கட்டம்–I இன் நீட்டிப்புத் திட்டம் தற்போது முடிவடைந்துள்ளது.

புதிதாக துவக்கி வைக்கப்பட்ட 9.051 கி.மீ தூரத்திலான சென்னை மெட்ரோ இரயில் கட்டம்–I நீட்டிப்புத் திட்டம், 2 சுரங்கப்பாதை மற்றும் 5 உயர்த்தப்பட்ட மெட்ரோ இரயில் நிலையங்களுடன் வடசென்னையின் மத்தியில் அமைந்துள்ளது. ரூ.3770 கோடி செலவு மதிப்பீட்டிலான இத்திட்டத்திற்கு மத்தியஅரசு, தமிழ்நாடு அரசு மற்றும் ஜப்பான் பன்னாட்டு கூட்டுறவு முகமை ஆகியவை நிதியுதவி அளிக்கின்றன. தற்போது சென்னை மெட்ரோ இரயில் நிறுவனத்தின் கட்டம்–I திட்டம் 54 கி.மீ நீளத்திலும், 21 சுரங்கப்பாதை மற்றும் 18 உயர்த்தப்பட்ட மெட்ரோ இரயில் நிலையங்களைக் கொண்டுள்ளது. வடசென்னை பயணிகள் சென்னை விமான நிலையத்தை 60 நிமிடங்களில் வந்தடைய முடியும்.

தொலைதூர இரயில்களை புரட்சித்தலைவர் டாக்டர் எம்.ஜி.இராமச்சந்திரன் மத்திய இரயில் நிலையம் மற்றும் எழும்பூர் இரயில் நிலையத்திலும், புறநகர் மற்றும் துரித இரயில் போக்குவரத்து இரயில்களை பூங்கா மற்றும் பூங்காநகர் இரயில் நிலையங்களிலும், தொலைதூர பேருந்துகளை கோயம்பேட்டிலுள்ள சென்னை புறநகர் பேருந்து நிலையத்திலும், மாநகரப் போக்குவரத்து பேருந்துகளை பல்வேறு இடங்களிலும் ஒருங்கிணைக்கும் வகையில், சென்னை மெட்ரோ இரயில் திட்டம்–கட்டம்–I வடிவமைக்கப்பட்டுள்ளது. கட்டம்–I இன் நீட்டிப்பிலும் டோல்கேட் மற்றும் திருவொற்றியூர் உயர்த்தப்பட்ட மெட்ரோ இரயில் நிலையங்கள் மாநகரப் போக்குவரத்து பேருந்து

முனையங்களுடன், வாகன நிறுத்தம் மற்றும் நடைபாதைகளுடன் சிரமமின்றி பயணம் செய்யும் வகையில் ஒருங்கிணைக்கப்பட்டுள்ளன.

மேற்கண்ட நடவடிக்கைகளினால் கரிய மிளவாயுவின் அளவு 30198 டன் குறையும். சென்னை மெட்ரோ இரயிலின் இந்த வழித்தடத்தில் ஒவ்வொரு நாளும் சுமார் 2 இலட்சம் மக்கள் பயணம் செய்வார்கள் என எதிர்பார்க்கப்படுகிறது. இந்தத் திட்டம் தேசிய உட்கட்டமைப்பு தொடர் திட்டத்தின் ஒரு பகுதியாகும்.